DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 212/2019**

**Deposition of LW4 examined as PW3** Dt. 02.02.2026

| | |
|---|---|
| Name | பாஸ்டின் |
| Father's/Husband's Name | பன்னீர் |
| Village | எஸ்.புதூர் |
| Taluk | |
| Age | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 02.02.2026

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து பிஎஸ்என்எல் நிறுவனத்தில் டெக்னிசியனாக வேலை பார்த்து வருகிறேன். சம்பவ சமயத்தில் மேற்படி நிறுவனத்தில் கேபிள் மெயின்டெய்னராக வேலை பார்த்து வந்தேன். கடந்த 18.07.2019 ம் தேதி மாலை 4.00 மணியளவில் நக்கம்பாடி மெயின்ரோட்டில் வந்து பார்த்த போது டவர் அருகே கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்த போது பாலையூர் போலீசார் டவரில் உள்ள பேட்டரி திருடு போனது சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். என்னையும் விசாரித்தார்கள். போலீசார் வந்து விசாரித்ததற்காக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா. ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை டவர் அருகே வைத்து செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே பொதுமக்கள் அங்கு கூடி இருந்தனர் என்றால் சரிதான். அங்கு கூடியிருந்த பொதுமக்கள் யாரிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 பிரபாகரன் எனக்குத் தெரிந்த நபர் என்றால் சரியல்ல அவரை எனக்கு யார் என்று தெரியாது. சம்பவத்திற்கு பின்னர்தான் அவர் எனக்கு அறிமுகம். நான்

2.2.26

**BSNL** ல் கேபிள் மெயின்டனன்ஸ் பணி செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக புகார் யார் கொடுத்தது என தெரியுமா என்றால் தெரியாது. டவரில் பேட்டரி காணாமல் போனது தொடர்பாக விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எத்தனை நபர்கள் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். கூட்டமாக இருந்தார்கள் எத்தனை நபர்கள் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என எனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கு விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

2.2.26

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை